

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## மரித்து உயிர்த்தார்! என்ற ஜெயம், நமது சொந்தம்!

"உயிரோடிருக்கிறவரை, நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?" (லூக்கா 24:5). நம் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை, இயேசு தன் சிலுவை மரணத்தால் ஜெயித்தபிறகு, அவர் தந்தருளும் 'ஜீவனோடு' வாழ்ந்திட நடத்துவதே, அவரின் உயிர்த்தெழுதல்! இத்தனை பெரிய **"இயேசுவின் ஜீவியம்"** வாழ்வதே **'இயேசு உயிர்த்தெழுதலின்'** மேன்மை! அதுபோலவே, இயேசுவின் இரத்தம் நம் பாவத்தைக் கழுவி மீட்டது மாத்திரமல்ல, நாம் தொடர்ந்து **"குற்றமில்லாத மாசற்ற வாழ்க்கை"** வாழ வைப்பதே "கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற குற்றமில்லாத இரத்தம்" (1பேதுரு 1:18). அவரது இரத்தத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் அத்தனை பொறுப்புள்ள பாக்கியம் உண்டு! அப்படியில்லாமல் 'புனித வெள்ளி' ஆசரிப்போ, ஞாயிறு தின 'ஈஸ்டர் பண்டிகையோ' கிறிஸ்தவமல்ல!

_tr

பெட்டகம் 23 | ஏப்ரல் 2021 | பரல்கள் 04



## கடின சுயம் 'உடைந்தவன்' உயிர்த்த இயேசுவின் ஜீவன் பெறுவான்!

ஓர் கோதுமை மணியின் ஜீவன், அதன் உள்பகுதியிலேயே இருக்கிறது. ஆனால், அந்த கோதுமை மணியின் வெளிப்புறமோ ஓர் கடினமான தோலை உடையதாயிருக்கிறது. அந்த கடினத்தோல் உடைந்து பிளந்திடாத பட்சத்தில் கோதுமைச் செடி முளைக்கவே முடியாது. கோதுமைமணி சாவதை ஆண்டவர் குறிப்பிடும்போது, நிலத்தின் மண்ணில் கோதுமை மணியானது சீதோஷ்ண நிலை மற்றும் நீர் நிலை போன்ற ஏதுக்கள் மூலமாய் அதனுடைய கடினத்தோல் உடைந்து பிளந்த பின்புதான் கோதுமைச்செடி முளைக்கத் தொடங்குகிறது. எனவே இவ்வசனத்தில் உள்ள முக்கியத்துவம் யாதெனில், கோதுமைமணிக்குள் ஜீவன் இருக்கிறதா என்றல்ல.... மாறாக, அதன் வெளிப்புற கடினத்தோல் உடைந்து பிளந்து விட்டதா? என்பதே கேள்விக்குறியாயிருக்கிறது.

தேவனை மெய்யாய் சேவிக்கிற யாராயிருந்தாலும், அவருடைய வல்லமையான கிரியைக்கு தடையாயிருப்பது, வேறு யாருமல்ல.... கடின சுயம் கொண்ட "தாங்கள்தான்" தடையாயிருக்கிறோம் என்பதை வெகு சீக்கிரத்தில் கண்டுபிடித்து... உடைந்து, பலன் தருவார்கள்!

*-Ed*

**2021 'பரலோக பொக்கிஷங்கள்' – வருட சந்தா ரூ.150.00**

*அநேகர் சந்தாவை புதுப்பித்ததற்கு நன்றி! புதுப்பிக்காதவர்கள்* **ஏப்ரல் 15-ம் தேதிக்குள்** *அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில்* **3** *பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.***125/-** *அயல்நாடு ஒரு பிரதி ரூ.***900/-** *அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள்* **'புதிது'** *என்று குறிப்பிடவும். நன்றி!*

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP**, Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## “உபத்திரவங்கள் கொண்டு வரும்” வெகுமதிகள்!

**உ**ண்மை கிறிஸ்தவனுக்கு தேவன், ஒருபோதும் கஷ்டங்களை அனுப்புவதே கிடையாது! “அதெப்படி? உபத்திரவங்கள் கஷ்டங்களில்லையா?” என நீங்கள் கேட்கலாம். அப்படி ஒருக்காலும் கிடையாது! மாறாக, உபத்திரவங்கள் நம்மைத் தேடிவரும் பெரும் உதவியே ஆகும். **நம் உண்மையான நிலை** இன்னது என நாம் கண்டுபிடிப்பதற்கே உபத்திரவங்கள் உதவுகின்றன!

காரியம் இப்படியிருக்க, இன்று விசுவாசியான கிறிஸ்தவ ஜனங்கள் தங்கள் கஷ்டங்களைத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சிலருடைய கஷ்டங்கள் தங்கள் கணவனிடமோ அல்லது மனைவியிடமோ அல்லது ஒரு சகோதரனிடமோ அல்லது ஒரு சகோதரியிடமோ உள்ளது! ஆனால், உண்மையில் இவ்வித எல்லாப் பிரச்சனைகளையும் இவர்களாகவேதான் உற்பத்தி செய்து கொள்ளுகிறார்கள். இங்ஙனம் நாமாகவே உருவாக்கிக் கொள்ளும் கஷ்டங்கள் தவிர, வேறு எவ்விதத்திலும் கஷ்டங்கள் என்பது கிடையவே கிடையாது!

> **இன்றைய கிறிஸ்தவ விசுவாசிகள், சூழ்நிலைகளைத் தவறான முறையில் கையாளுகிறபடியினால்தான் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எனவே, தேவனோ அல்லது வேறு எவரோ நம் கஷ்டங்களுக்குப் பொறுப்பாளி அல்ல. மாறாக, நாமே பொறுப்பாளிகள்!**

ஒவ்வொரு சூழ்நிலைகளுக்கும் உரிய தேவசித்தத்தைத்தான் வேதாகமம் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றதே! வேதம் காட்டும் நல்வழிகளில் நாம் சென்றுவிட்டால், நமக்கு ஒருபோதும் எவ்விதக் கஷ்டங்களும் இல்லை.

என்னைத் தெரிந்திருக்கிற உங்களில் யாராகிலும், நான் என் கஷ்டங்களைக் குறித்துப் பேசியதை ஒருபோதும் கேட்டிருக்கவே மாட்டீர்கள். ஏன் தெரியுமா? எனக்குத்தான் கஷ்டமென்று ஏதுமில்லையே! ஆனால் ‘உபத்திரவங்களும் பரீட்சைகளும்’ வேதாகமத்தில் நிறைய உள்ளன! நான் மாத்திரம் அல்ல, நம் எல்லோருடைய ஜீவியத்திலும் இவைகள் அதிகமாகவே உள்ளன.

*ஏனெனில், "நாம்* **அநேக உபத்திரவங்களின் வழியாய்** *தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் (MUST)" என்றே வேதம் திட்டமாய் கூறுகின்றது (அப்.14:22).*

*தேவனுடைய வார்த்தை, நம்மை செம்மையான பாதைக்கு வழி நடத்தும் நல்ல வழிகாட்டியாகும்! ஆகவே, தேவனுடைய வார்த்தைக்கு வேறுவிதமாய் வியாக்கியானம் கொடுத்து ஒருக்காலும் பாதை தவறி சென்றுவிடாதீர்கள். இங்கே கவனம் கொள்வீர்!..... திரளான உபத்திரவங்களும், பரீட்சைகளும் 'தேவனுடைய ராஜ்யத்திற்கே' நம்மைத் தகுதிப்படுத்துகின்றன!!* **அப்படியானால் என்ன? கஷ்டம் என்பதே நமக்கில்லை!** *இதற்கு மாறாக நீங்கள் கஷ்டங் களைக் குறித்து பேசுவீர்களென்றால், நீங்கள் உண்மையாகவே அறிக்கை செய்வது யாதெனில், "நான் உபத்திரவங்களையும் அதற்குரிய சூழ்நிலைகளையும் தவறான முறையில் கையாண்டு விட்டேன்!!" என்பதைத்தான் அறிக்கை செய்கிறீர்கள். இவ்வித நிலையில், நீங்கள் தொடர்ச்சியாக ஓர் மிஷினைப் போல் 'கஷ்டங்களையே' உற்பத்தி செய்து கொண்டிருப்பீர்கள்!*

*இப்போது 2கொரிந்தியர்4:16-18 நமக்கும் எடுத்துரைக்கும் அற்புத செய்தி என்னவெனில்.... "ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை, எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்து....." என வாசிக்கிறோம். நம் புறம்பான மனுஷன் அழிவதற்காக நம்மில் யாராவது கவலை கொள்வார்களா? எப்படியாயினும், நம் எல்லோருடைய புறம்பான மனுஷனும் என்றாவது ஒருநாள், அழியத்தானே போகிறது! தொடர்ந்து இந்த வசனம் கூறுவதைக் கேளுங்கள், உபத்திரவங்களின் மூலமாய் புறம்பான மனுஷன் அழியும்போது ".... உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப் படுகிறான்" என்றல்லவா கூறுகிறது! இதைக் காட்டிலும் ஓர் மகிமை யான செய்தியை நீங்கள் எங்காகிலும் கேள்விப்பட்டதுண்டா? என்ன ஆச்சரியம், நம் புறம்பான மனுஷன் அழிந்து கொண்டிருக்கும் வேளையில் நம் உள்ளான மனுஷனோ நாளுக்கு நாள் புதிதாக்கப்படும் ஆச்சரியம்!!*

**இந்த அற்புத வசனம் இன்னமும் தொடர்ந்து கூறுவதைக் கேளுங்கள், "....அதி சீக்கிரத்தில் நீங்கும் லேசான நம்முடைய உபத்திரவம்..." ஆம், நமக்கு இனி கஷ்டம் இல்லை! உபத்திரவம் மாத்திரமே உண்டு!**

*இங்கே உபத்திரவத்தைக் குறிப்பிடும் வார்த்தை எத்தனை அலங்காரமாய் ஜொலிக்கின்றது பார்த்தீர்களா? அது என்ன? நம் உபத்திரவங்கள், "***அதிசீக்கிரத்தில் நீங்கும்** *லேசான உபத்திரவம்!"*

இவ்வசனம் உங்களைப் பரவசப்படுத்தவில்லையா? ஆம், நமக்கு ஓர் நீண்ட முடிவற்ற உபத்திரவங்கள் கிடையாது. நம்முடைய உபத்திரவம் மிகமிகக் குறுகிய கால அளவிற்கே உட்பட்டதாகும். அப்படித்தான் தேவனுடைய வார்த்தை கணீரென ஒலிக்கிறது. இதற்கு மாறாக, லேசான உபத்திரவத்தை நீங்கள் மிகவும் பெரிதாக எண்ணுகிறீர்களோ? இப்படித்தான் நீங்கள் உபத்திரவங்களைத் தவறான அணுகுமுறையில் கையாண்டு கொண்டிருக்கிறீர்கள்! எந்த உபத்திரவமும் நீடித்திருக்கப் போகிறவைகள் அல்ல.... உபத்திரவங்கள் மிகவும் 'சுருக்கமானதாகும்' (brief)! அவ்விதமே சத்திய வேதம் தெளிவாக நமக்கு கற்றுக் கொடுக்கிறது.

தேவனுடைய வார்த்தையில் காணப்படும் சத்தியத்தை நாம் அப்படியே அங்கீகரிக்க அறிந்திருக்க வேண்டும். நம்முடைய உபத்திரவங்கள் முப்பது ஆண்டுகள் நீடித்திருந்தாலுமென்ன? அவைகளை நாம் நித்தியத்தோடு ஒப்பிடுகையில் ஒன்றுமில்லையே.....! தேவன் தரும் அளவின்படி அவைகள் மிக மிக சுருக்கமானதேயாகும்!! ஒரு ஒப்பீட்டு விகிதாச்சார கணக்கை நாம் போட்டுப் பார்ப்பது, நம் அனைவரின் கண்களையும் தெளியச் செய்யும் என்றே நான் நம்புகிறேன்....

**அநேக உபத்திரவ ஆண்டுகள் : நித்தியம்**

இந்த விகிதாச்சாரத்திற்கு ஓர் ஒப்பீட்டு கணக்கை நீங்கள் போட்டு விடை கூற முடியுமா? முடியாது, இந்த விகித கணக்கை ஒருவராலும் ஒப்பிட்டு விடை காண முடியாது! நாம் ஒரு நீண்ட நூறு ஆண்டுகள் வாழ்ந்தாலும், அவ்வருடங்களை நித்தியத்திற்கு ஒப்பிடவே முடியாது.

நாம் வேதத்தில் சொல்லப்பட்டவைகளை 'அப்படியே விசுவாசித்தால் மாத்திரமே' அது வழங்கும் மறுரூப வாழ்வை நாம் பெற்றிட முடியும்! நாம் நினைப்பது.... அபிப்ராயப்படுவது ... ஆகிய யாவும் சுத்த மதியீனமாகும். வேதத்தில் என்ன எழுதப்பட்டிருக் கிறதோ, அவைகள் மாத்திரமே நூற்றுக்கு நூறு சரியானதாகும்! ஆம், நமக்கு "அதி சீக்கிரத்தில் நீங்கும் உபத்திரவமே...." உள்ளது. இதை அப்படியே விசுவாசித்து விட்டீர்களா? உபத்திரவம் "சுருக்கமானது (brief)" என்பதை விசுவாசியுங்கள்! அப்படியே மிதமிஞ்சிப் போனால் நூறு வருடங்கள்தான்! இன்னும் என்ன? "அதிசீக்கிரத்தில் நீங்கும் லேசான (light) நம்முடைய உபத்திரவம்!" என்றும் வேதம் கூறுகிறதே! இதென்ன.... அச்சுப்பிழை ஏற்பட்டு விட்டதோ? நமக்கு ஏற்படும் ஏராளமான உபத்திரவங்களும் பரீட்சைகளும் 'லேசானது' என எழுதப்பட்டிருக்கிறதே! ஆனால், அவைகளை பாரமானது (heavy)

*என்றல்லவா எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். சரிதான், அவையாவும் உங்கள் சொந்த அபிப்ராயங்கள்தான்!*

**நீங்கள், எழுதப்பட்ட வார்த்தையை அப்படியே விசுவாசிக்காமல், உபத்திரவங்களைத் தவறான முறையில் கையாண்டு "பாரமான உபத்திரவத்தை" நீங்களே உற்பத்தி செய்து விட்டீர்கள். நீங்கள் என்னத்தை அபிப்ராயப்பட்டீர்களோ அல்லது எண்ணினீர்களோ அவைகளைத்தான் விசுவாசித்துவிட்டீர்கள். இன்று ஓர் உண்மையைக் கேளுங்கள்..... உங்கள் நினைவும், அபிப்ராய உணர்ச்சிகளும் தவறு!**

*பௌதீகப் பாடத்தில் நான் படித்த ஓர் உண்மையை இங்கு கூற விரும்புகிறேன். அப்பாடம் கூறுவது யாதெனில், "உஷ்ணத்தை அளப்பதற்கு, நம் சரீரமே ஏற்ற உபகரணமாய் உருவாக்கப்பட்டதல்ல" என்பதுதான். உஷ்ணமானியே (Thermometer) உஷ்ணத்தை அளக்கும் சரியான உபகரணமாகும். ஆம்,* **வேதமே நமது உஷ்ணமாணி!**

*இனி தொடர்ந்து கவனியுங்கள், "நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான (அளவிற்கடங்காத)* **நித்திய கனமகிமையை** *உண்டாக்குகிறது" என்ற சத்திய வேதத்தின் அறைகூவலைப் பாருங்கள்! கைமேல் கிடைக்கும் இப்பிரதிபலன்கள் உங்களில் யாருக்காவது கஷ்டமாகத் தோன்றுகிறதா? சத்திய வசனம் சொல்வது மாத்திரமே உண்மை, பிற அனைத்தும் பொய்.... கவனம்!*

*தீமைக்கு நன்மை செய்ய வேண்டுமென சத்தியவேதம் கூறுவதை நாம் யாவருமே அறிந்திருக்கிறோம். ஆம், நாம் சந்திக்கும் தீமைகளே உபத்திரவத்திற்குக் காரணமாய் உள்ளன. இதுவே நமக்கு இப்போது பரீட்சையாகவும் உள்ளது. இவ்வேளையில், அத்தீமைக்கு நான் நன்மை செய்துவிட்டால், அதுவே இந்த பரீட்சைக்கு விடையாகி, நம்மை ஆனந்தக் களிப்பில் ஆழ்த்திவிடுகிறது! இவ்வாறு, நான் என்ன செய்ய வேண்டுமென சத்திய வேதம் கூறுவதை நான் செய்துவிட்டால், அதுவே 'மகிழ்ச்சியின் அலை உச்சிக்கு' என்னைத் தூக்கிச் செல்லுகிறது!*

*இதற்கு மாறாக ஜனங்கள் செயல்படுவதால், அவர்களும் தீமையின் அலைக்குள் இழுத்துச் செல்லப்பட்டு, "எனக்கு இழைக்கப்பட்ட தீமையின் பயங்கரம் மகா கொடியது.... இதுபோன்ற கொடிய தீமையை அவர்கள் எனக்கு எப்படிச் செய்யலாம்?...." என்றெல்லாம் புளுங்கித் தவிக்கிறார்கள். இப்படியெல்லாம் நீங்கள் புளுங்குவதும்... தவிப்பதும்.... வேதத்தில் எங்கேயாவது எழுதியிருக்கிறதா? நீங்கள் தீமைக்கு நன்மை செய்ய வேண்டும் என்று மட்டும்தானே எழுதியிருக்கிறது! அப்படியானால், ஓர் நன்மை செய்வதற்கு யாரும்*

*புளுங்கித் தவிக்கத் தேவையில்லையே!? இன்று ஜனங்களோ, வேதத்திற்கு எதிர்முரணான காரியங்களைச் செய்துகொண்டு, கஷ்டம் என்று சொல்கிறார்கள். இங்ஙனம் நீங்கள் இருப்பீர்களென்றால், நீங்கள் கஷ்டத்தை* Non-stop *ஆக தொடர்ந்து உற்பத்தி செய்து கொண்டேதான் இருப்பீர்கள்!!*

*தனிப்பட்ட முறையில் என்னுடைய சாட்சியைக் கேளுங்கள். என் வாழ்க்கையில் ஒரு கஷ்டமும் இல்லை! என, நான் கூறிட முடியும். ஆம், ஒன்றுகூட இல்லை! இதன் இரகசியம் யாது தெரியுமா? எழுதப் பட்ட வார்த்தையை அப்படியே விசுவாசிப்பதற்கும், நான் எங்ஙனம் நடந்துகொள்ள வேண்டும் என வேதம் கூறுகிறதோ, அங்ஙனமே நடப்பதற்கும் ஏற்ற கிருபையை என் வாழ்க்கையில் பெற்றிருக்கிறேன். இதுவே அந்த இரகசியம்! எனவேதான், எனக்கு நேரும் எல்லா உபத்திரவங்களிலும் 'பரத்தின் வெகுமதிகள்' நிறைவாய் பெற்று, ஆனந்திக்கிறேன்!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

---

## 'பரிசுத்தம் குறைந்தால், மகிழ்ச்சி குறையும்!' நல்ல இருதயம் வேண்டும்!

*மகிழ்ச்சியாயிருக்கும் பொருட்டு ஒருவன் கொண்ட எந்த சுய நல விருப்பமும் இச்சைக்கு ஒப்பான பாவமேயாகும்! அதனுடைய வேர் மாம்சத்திலிருக்கிறபடியால், அது தேவனுக்கு முன்பாக ஒருக்காலும் நின்றிட முடியாது!! ஏனெனில், "மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை! அது, தேவனுடைய பிரமாணத்திற்கு உட்பட்ட தல்ல! அவ்வாறு உட்படவும் முடியாது!!" என ரோமர் 8:7 ஆணி அறைந்தாற் போல் கூறுகிறது.*

*ஒரு பெண் தன்னுடைய சம்மதத்தை திருமணமாகப்போகும் மனுஷனுக்கு கொடுப்பதற்கு முன்பாக "அவர் என்னை சந்தோஷப் படுத்துகிறவராயிருப்பாரா?" என்றுதான் கேட்கிறாள்! அதற்குப் பதிலாய், "நான் அவருக்கு மகிழ்ச்சியை கொடுக்கிறவளாய் இருந்திட முடியுமா?" என்ற* **சுயநலமில்லாத கேள்வியை** *இவள் கேட்பாளா என்பது சந்தேகத்திற்குரியதாகவே இருக்கிறது. இன்று, மனநோய் வைத்தியத்திற்குச் செல்லும் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கிறது. எதற்காக? "எப்படியாவது தங்களுக்கு சந்தோஷம் வேண்டும்!" என்ற இவர்களது பித்துப்பிடித்த தேடுதலே காரணமாகும்.*

*இன்றைய 21-ஆம் நூற்றாண்டின் இந்த மனுக்குலம் கொண்டி ருக்கும் கொள்கை யாதெனில் "சந்தோஷமாயிருப்பதற்கே நாங்கள்*

பிறந்திருக்கிறோம்!'' என்ற ஒரு-வரி கொள்கை மாத்திரமேயாகும். இவர்களில் ஒருவராவது "வீழ்ச்சியுற்ற மனிதன் சந்தோஷத்தைக் கேட்பதற்கு என்ன தார்மீக உரிமையுண்டு?'' என தட்டிகேட்பதற்கு தைரியம் அற்றவனாக இருக்கிறான். இவர்களின் புத்தகங்கள், ஆடல்,பாடல் அனைத்தும் அவனவன் தனிப்பட்ட விதத்தில் சந்தோஷத்தைத் தேடும் கடும்போராட்டத்தை சுட்டிக்காட்டுவ தாகவே உள்ளது! தன்னுடைய உண்மை நிலையை உணர்ந்த எவனும், சந்தோஷத்தைக் கேட்பதற்குரிய உரிமை தனக்கு இல்லையென்பதை உணர்ந்திருப்பான்!

இந்த உலகம் போகட்டும், இன்றைய நவநாகரீக கிறிஸ்தவ உலகம் சுவிசேஷத்தை **தங்களுக்கு மகிழ்ச்சியையும்,** மன அமைதியையும் கொடுக்கும் மார்க்கமாகவே பயன்படுத்துகிறார்கள். இந்த நோக்கத்தை நிறைவேற்ற இவர்கள் வாசிக்கும் வேதாகமம் "போதை மருந்தை'' உட்கொள்ளுவது போல் செய்கிறார்கள்!

நல்ல உணர்வுள்ள மனிதன் புதிய ஏற்பாட்டின் ஒரு சில பக்கங்களை தியானத்துடன் வாசித்தாலே, சத்திய வேதத்தின் வலியுறுத்துதல் மகிழ்ச்சியை எல்லையாய் வைக்காமல், பரிசுத்தத்தை எல்லையாய் வைத்திருப்பதை மிக எளிதில் கண்டு கொள்ளுவான். ஜனங்களின் **இருதயத்தை** குறித்த நிலையில் தேவன் அதிக அக்கறை கொண்டிருக்கிறாரேயல்லாமல், அவர்களுடைய **உணர்வுகள்** எந்த நிலையிலிருக்கிறதோ என்பது அவருக்கு அதிக முக்கியமல்ல. கீழ்ப்படிதல் கொண்டவனாய் தேவசித்தத்தை நிறைவேற்றுகிறவன் மாத்திரமே சந்தேகத்திற்கு இடமில்லாமல் பூரண மகிழ்ச்சி கொண்டவனாயிருப்பான். ஆகிலும், அவனைப் பொறுத்தவரையில் தான் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறான் என்ற கேள்வியல்ல...... தான் எவ்வளவு பரிசுத்தமாயிருக்கிறான் என்பதே முக்கிய கேள்வியாய் அவனுக்குள் குடிகொண்டிருக்கும்!

**தான் பரிசுத்தமில்லாது வாழ்ந்து கொண்டு அதேசமயம் ஒருவன் மகிழ்ச்சியை நாடுவது மாபெரும் மதியீனம்!**

தேவனுடைய சித்தம் இன்னதென்று அறியவும் பின்பு அதை நிறைவேற்றவும் எடுக்கின்ற முயற்சியே சாலச் சிறந்ததாகும்! எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்? என்ற விஷயத்தை கிறிஸ்துவினுடைய தீர்மானத்திற்கு விட்டு விடுவதே ஒப்பற்ற வாழ்க்கையாகும்.

இவ்வேளையில் உங்களுக்கு இருதயத்தில் உணர்த்துதல் ஏற்பட்டால், நான் உங்களுக்குச் சொல்லும் ஆலோசனை "நீங்கள் தேவனிடத்திற்குப்போய், ஆண்டவரே! என்ன கிரயம் செலுத்தியா

*கிலும் நான் பரிசுத்தம் அடைய வேண்டும் என்பதே என் தீராத ஆசையாயிருக்கிறது என கேளுங்கள். மேலும், ஆண்டவரே! பரிசுத்தத்தின் சந்தோஷத்தை விட அதிகமாய் வேறு சந்தோஷத்தை நீர் எனக்குத் தர வேண்டாம்!" என்றும் கேளுங்கள்.*

**உங்கள் பரிசுத்தத்தில் கறை ஏற்பட்டால் உங்கள் சந்தோஷம் மங்குவதாக!** *அவ்வித தருணத்தில் நீங்கள் தேவனிடம் உடனே சென்று "ஆண்டவரே நான் மகிழ்ச்சியாயிருக்கிறேனோ அல்லது இல்லையோ என்பது எனக்கு ஒரு பொருட்டல்ல, ஆனால் தயவுசெய்து என்னை மீண்டும் பரிசுத்தமாக்கும்" என வேண்டிக் கேளுங்கள்! இருப்பினும் ஒன்றை உங்களுக்கு அறுதியிட்டு உறுதியாய் நான் கூறிட முடியும்: "முடிவில், நீங்கள் எந்த அளவு பரிசுத்தமாயிருக்கிறீர்களோ, அந்த அளவிற்கு நிச்சயம் மகிழ்ச்சியாயும் இருப்பீர்கள்!" ஆமென்.*

*– A.W. டோசர்*

---

## 'பாய்ந்திடும் கிருபை வெள்ளம்' திரள் மக்களை ஆசீர்வதிக்கும்!

*அன்று மாலை மிக தாமதமாக ஜெக்ஸ்* (Gex) *நகரம் வந்து சேர்ந்தோம். ஆனால், நாங்கள் தங்குவதற்கென்று கட்டப்பட்ட வீடு பூர்த்தியாகாமல் இருந்தது. ஜெனிவா பிஷப் அவர்கள், சகலமும் நேர்த்தியாய் சில நாட்களுக்குள் செய்து தரப்படும் என வாக்குரைத்தார். அன்று நான் சகோதரிகளின் அன்பு இல்லத்தில் தங்கினோம். நல்ல படுக்கை வசதி கொடுத்து, அந்த சகோதரிகள் அன்புடன் எங்களை நடத்தினார்கள்!*

*இந்த நாட்களில், பிள்ளைகளோடு தங்கியிருந்த என் மகளின் சுகவீனம் அறிந்து வருந்தினேன். அவள் அதிகமான சுகவீனத்தில் மெலிந்து போய் இருந்தாள். அவளை, நான் தங்கியிருந்த கன்னி மாடத்திற்குள் வைத்து கொள்ள அதிகமாய் விரும்பினேன்.*

**மெலிந்திருந்த என் மகளை நான் பார்த்து, என் கண்ணீரை அவளுக்கு காட்டாமல், தனியே சென்று அழுது வந்தேன்!**

*டோனானிலுள்ள* (Tonon) *கன்னி மாடத்திற்கு அவளை அழைத்துக் கொண்டு வர அதிகமாய் விரும்பினேன். என் விருப்பத்தை, அங்குள்ள கன்னியாஸ்திரீகளிடம் கூறி "நாங்கள் தனியாய் வீடு அமைத்து குடியேறும் வரை என் மகள் டோனான் மாடத்தில் இருக்க வேண்டும்" என வேண்டினேன். ஆனால் கன்னிமாடத்திலிருந்த எல்லா சகோதரிகளும் என் விருப்பத்திற்கு எதிர்ப்பை தெரிவித்தார்கள். எலும்பும் தோலுமாய் மாறிவிட்ட என் மகளைக் குறித்து இந்த சகோதரிகளுக்கு இரக்கமில்லையே? என்ற வருத்தம் என்ன தாக்கிற்று.*

என் ஆஸ்தி அனைத்தையும் கன்னிமாடத்திற்கு கொடுத்த எனக்கு 'ஒரு சிறு நன்றி செயல்கூட' அவர்களிடம் இல்லாததைப் போல் நான் உணர்ந்தேன். ஞானமில்லாத என்னுடைய தியாகத்தினிமித்தம் என் சிறு மகள் பலியாக வேண்டிய நிலை வந்ததோ என உள்ளம் தடுமாறினேன். கன்னிமாடத்திலுள்ள சகோதரிகள் என் விருப்பத்தை அங்கீகரிக்காதபடியால், தந்தை லா - கோம்பே அவர்களிடத்தில் கடிதம் எழுதி சற்று துரிதமாய் வரும்படி விண்ணப்பித்தேன். என் மகள் பெலவீனத்தோடு அங்கு இருப்பதை என் மனசாட்சி ஏற்றுக்கொள்ள வில்லை. கடிதம் எழுதி பல நாட்கள் சென்ற பின்பும் தந்தை லா-கோம்பே எந்த பதிலும் அனுப்பாதபடியால், என் உள்ளத்தில் யாதொரு முறுமுறுப்பும் ஏற்படவில்லை!

**நான் விரும்பிய உபகாரம் எனக்கு கிடைத்தாலோ அல்லது கிடைக்காமல் போனாலோ, அது ஒரு பொருட்டல்ல என தீர்மானித்து "தேவனுடைய சித்தத்திற்கு" என்னை முற்றிலுமாய் ஒப்புக்கொடுத்து என் ஆத்துமாவில் இளைப்பாறுதல் கண்டடைந்தேன்.**

சரியான இந்த சமயத்தில்தான் தேவன் கிரியை செய்ய தொடங்கினார். ஆத்துமத்தில் இளைப்பாறுதல் காணாமல், தேவனை சமீபமாய் காண முடியாது என்ற உண்மையை நான் அறிந்திருந்தேன்! கர்த்தருடைய கட்டளைப்படி ஜெனிவா பிஷப் அவர்கள் என் நிலைமை குறித்து தந்தை லா- கோம்பேயிடம் கடிதம் எழுத, அவரும் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து வந்தார். அன்று லா- கோம்பே அவர்களை நேரில் பார்த்தவுடன் என் உள்ளத்தின் ஆழத்தில் கிருபை பிரவாகம் பொங்கியதைப் பார்த்தேன். அப்படியொரு தெய்வ தன்மையை, அவருடைய பிரசன்னத்தில் கண்டேன். அவருக்குள் இருந்த கிருபை எனக்குள் பாய்ந்த அற்புதத்தைப்போல் வேறு எந்த பரிசுத்தவானிடத்திலும் நான் அனுபவமாய் பெற்றதில்லை. அதேபோலவே எனக்குள் பாய்ந்த கிருபை வெள்ளத்தை அவருக்குள் உணர்ந்ததாகவும் என்னிடத்தில் பகிர்ந்து கொண்டார்.

**அது எப்படியெனில், கிருபையின் அலை பாய்ந்து நிரப்புவதும்.... அந்த அலை திரும்பி மற்றவருக்கு பாய்ந்து செல்வதும், கண்களுக்கு புலப்படாத திவ்விய சமுத்திரத்தைப்போல் உணர்ந்தேன். இதுபோன்ற பாய்ந்து செல்லும் கிருபையின் வெள்ளத்தை தேவன் மாத்திரமே நமக்குள் செயல்படுத்த முடியும்!**

இவ்வாறு கிருபை பிரவாகம் ஒன்றை மற்றொன்று சந்திக்கும் ஐக்கியம் சகல பெலவீனங்களையும், சகலவித சுய நல களிம்புகளையும் சுத்திகரிப்பதைக் கண்டேன். **உள்ளத்திலிருந்து புரண்டு வரும் கிருபை**

**பிரவாகத்தை** *மெய்யாகவே ருசிக்கிறவர்கள், தாங்களும் சுத்திகரிக்கப் பட்டு, கர்த்தருக்கு பிரியமான சிலுவை வழி செல்லும் அன்பர்களின் பாரங்கள் நீங்குவதையும், சாவுக்கீனமாக சரீரத்தின் பிரசன்னத்தை கூட மறந்து மகிழ்ந்திருப்பதையும் ருசிப்பார்கள்! இதுபோன்ற* **கிருபையின் ஐக்கியம்** *மனுஷர்களின் கண்களுக்கு புலப்படுவதில்லை. இதுபோன்ற ஐக்கியம் வெறும் அனுபவமாய் இல்லாமல், தங்கள் ஆத்துமாவில் தேவனோடு இணைந்து கட்டப்படும் நிஜ அனுபவமாயிருக்கிறது. சிறிதும் சந்தேகத்திற்கு இடமில்லாமல், இந்த அனுபவம் தேவனிடத்தி லிருந்து பிரவாகித்ததைக் கண்டேன். அவரைவிட்டு தள்ளி நிற்கும் மனதை அவரோடு ஆழமாய் நெருங்கி வரச் செய்திடும் மெய்யான கிருபை அது! என் ஆத்துமத்தில் படிந்திருந்த சகல வலிகளையும் போக்கி சொல்லி முடியாத சமாதானத்தை என் உள்ளத்திற்குள் ஊற்றியது!*

> ***தந்தை லா-கோம்பேயிடமிருந்து பாய்ந்து வந்த கிருபை பிரவாகம், என் சிந்தைக்கு எட்டாத தாழ்மைக்குள் நான் இணையும்படி செய்தது. மேலும் என்னையே நான் மட்டுப்படுத்திக் கொள்ளும் 'தாழ்வு மனப்பான்மை யையும்' அந்த கிருபை பிரவாகம் அகற்றியதைக் கண்டேன்.***

*இச்சமயத்தில், நான் எண்ணியபடியே தந்தை லா-கோம்பே அவர்களும், என் மகள் டோனான் நகருக்கு வருவதே நலம் என்று கூறினார். அங்குள்ள சூழ்நிலை அவளுடைய பெலவீனத்தை போக்கி பெலப்படுத்தும் எனவும் உற்சாகப்படுத்தினார். 'புதிய முறை கத்தோலிக்கத்தில்' எனக்கு நாட்டமில்லை என்பதை அவருக்கு தெரியப்படுத்தினேன். அதை அமோதித்த அவர் "இந்த ஸ்தலத்தில் நீங்கள் தொடர்ச்சியாயிருப்பது தேவனுக்கு சித்தமில்லை" என கூறினார். இங்கிருக்கும் நாட்கள் வரை யாதொரு ஊழியங்களிலும் ஆழமாய் ஈடுபடாமல், கர்த்தர் தமது அநாதி தீர்மானத்தின்படி நடத்தி* **மாறிச் செல்ல வேண்டிய இடத்தை அவரே காட்டுவார்** *எனவும் உற்சாகப் படுத்தினார். சமீப காலமாய், நள்ளிரவில் விழித்து ஜெபிக்கும் பழக்கத்தை வளர்த்து கொண்டேன். அவ்வாறு நான் கண் விழித்தவுடன் "ஓ என் தேவனே! உம் புத்தக சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது. இதோ உம் சித்தம் செய்ய வருகிறேன்" என்ற ஜெபமே என்னை ஆட்கொண்டது. இந்த ஜெபத்தின் ஊடாய் பெற்ற அனுபவம் என்னவென்றால், நான் இதுவரை அனுபவித்திராத பரிசுத்தம் என் உள்ளத்தில் பாய்ந்து, தெய்வ கிருபையில் என் இருதயம் ஒன்றாகி மகிழ்ந்ததை அனுபவித்தேன்!*

– *மேடம் குயான்*

**சுகமாக்கும் வரத்தோடு "விசுவாச தைரியம் கொண்ட" தாஸன்!**

*சுவிட்சர்லாந்து சுகமளிக்கும் பொதுகூட்டத்தில், ஜெபிப்பதற்கு ஜனங்களை அழைத்தார் விக்கிள்ஸ்வொர்த். அச்சமயத்தில், ஒரு இளம்பெண் தன் முகம் முழுவதும் 'கட்டிகள் பெரிதாகி தொங்க' மேடைக்கு ஏறி வந்தாள். அவளை மேடையின் நடுவே நிறுத்தி, "புற்றுநோய் வியாதியால் அகோர முகமாகிப் பாதிக்கப்பட்ட இந்தப் பெண்ணை எல்லோரும் பாருங்கள்! இப்போது நான் ஜெபித்தவுடன் புற்றுநோயின் வேர் செத்துவிடும். நாளை இவள் இதே மேடையில் வந்து நிற்பாள்! அப்போது இவள் பூரண சுகம் அடைந்ததை நீங்கள் எல்லோரும் காண்பீர்கள்" என கூறிவிட்டு, அவள்மீது கைவைத்து சுகத்திற்காக ஜெபித்தார்! தலையில் எண்ணெய் பூசி இந்த கொடிய வியாதி, அவளை விட்டு நீங்கும்படியாய் கட்டளை கொடுத்தார்.*

> **'புற்றுநோய் வியாதி' சாத்தானின் அழிவுக்குரிய கிரியை என *விக்கிள்ஸ்வொர்த்* அடிக்கடி கூறுவார். ஜெபித்து முடித்தவுடன், மாற்றம் எதுவும் நிகழவில்லை! *விக்கிள்ஸ்வொர்த்* அவளை பார்த்து "நாளை மாலை இந்த மேடையில் நீ வந்து, சுகம் பெற்றதை அறிவித்து தேவனை மகிமைப்படுத்து" என கூறி அனுப்பிவிட்டார்.**

*புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அருவருப்பான முகத்தோற்றம் கொண்ட அந்த பெண்ணை நன்கு அறிந்த ஊரார், 'நாளை என்ன நடக்குமோ?' என ஆச்சரியப்பட்டார்கள்! நாளையும், அன்று மாலையும் வந்தது! ஜெபவேளையும் வந்தது! எத்தனையோ சுகம் அடைந்த சாட்சிகள் கூறப்பட்டது. புற்றுநோய் வியாதியால் பாதிக்கப் பட்டு விக்கிள்ஸ்வொர்த் ஜெபம் ஏறெடுத்த அந்தப் பெண்ணும் கெம்பீரமாய் நடந்து மேடையின் நடுவில் நின்றாள்.* **அகோர முகம் கொண்ட அந்தப் பெண் பிரகாச முகத்தோடு** *அழகுற நின்றதைக் கண்டு பெரும் திரளான கூட்டம் கர்த்தரை மகிமைப்படுத்தி, ஆரவாரித்தது! புற்றுநோய் இருந்த சிறிய வடுகூட அவள் முகத்தில் காணப்பட வில்லை! அந்த மேடையில் விசுவாசம் மாத்திரமல்ல, விக்கிள்ஸ் வொர்த்தின்"விசுவாச தைரியம்" வெளிப்பட்டதை ஜனங்கள் கண்டார்கள்!*

*மற்றொரு சம்பவம், சுவிட்சர்லாந்து சுகமளிக்கும் கூட்டத்தி லேயே நடந்தது! கிறிஸ்தவர்களிலும் நாத்திகர்கள் பலர் உண்டு. சுவிட்சர்லாந்தில் பிரபல்யமான பல் மருத்துவராய் டாக்டர் எமில் இருந்தார். அவர் ஒரு கிறிஸ்தவ நாத்திகவாதி! அன்று சாட்சி நேரத்தில் இந்த பிரபல்ய பல் டாக்டர் எமில் மேடையில் வந்து நின்றார். டாக்டர்*

எமில் கணக்குப்படி, வயதான ஊழியர் விக்கிள்ஸ்வொர்த்தின் பற்களும் ஈறுகளும் அரித்து நோய்பட்டிருக்கும் என எண்ணினார். "சுகமளிக்கும் இவரின் பற்களையும் ஈறுகளையும் நான் சோதிக்க இடம் தருவீர்களா?" என கேட்டவுடன், ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் மகிழ்ச்சியுடன் முன் வந்து நின்றார். கூட்டத்தில் சற்று சலசலப்பு ஏற்பட்டது! சில நிமிடங்கள் விக்கிள்ஸ்வொர்த்தின் பற்களையும் ஈறுகளையும் சோதித்துப் பார்த்த டாக்டர் எமில், வெட்கத்தோடு முகம் கவிழ்ந்து "தேவ ஊழியர் விக்கிள்ஸ்வொர்த்தின் பற்களும் ஈறுகளும் பூரண ஆரோக்கியத்துடன் திடமாய் இருக்கிறது" என அறிவித்தவுடன், மக்கள் கர்த்தரை கரகோஷம் செய்து மகிமைப்படுத்தினர்! அன்றுமுதல், டாக்டர் எமில் விக்கிள்ஸ்வொர்த்தின் பெந்தெகொஸ்தே சபையில் முழு அர்ப்பணம் கொண்ட கிறிஸ்தவராய் மாறிவிட்டார். வெறும் 15 பேர் மாத்திரமே இருந்த சபையில் டாக்டர் எமில் மனந்திரும்பி வந்தவுடன், சில நூறு ஜனங்களை கர்த்தர் சபையில் சேர்த்துக் கொண்டார். அவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டது மாத்திரமல்லாமல் **பரிசுத்தாவியினால் நிறைந்திருக்கும்படி** விக்கிள்ஸ்வொர்த் நடத்தினார்.

விக்கிள்ஸ்வொர்த்தின் **விசுவாச தைரியத்திற்கு** மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு சுகமளிக்கும் கூட்டத்தில், பிரபல்யமான சில மருத்துவர்கள், **இயற்கை விதிக்கு அப்பால் சுகம் பெறுவது சாத்தியமில்லை** எனக்கூறி விக்கிள்ஸ்வொர்த்தின் மீது புகார் செய்தார்கள். அவரை கைது செய்து விசாரணைக்கு அழைத்துவர சில இன்ஸ்பெக்டர்கள் அனுப்பப்பட்டார்கள். சற்றும் எதிர்பாரத விதத்தில் போலீஸ் அதிகாரிகளின் மத்தியில் ஒரு பெண் வந்து நின்றாள். "அதிகாரி அவர்களே, இந்த ஊரில் கொடிய போதையில் கலகம் செய்யும் பெண்மணி நான்! என்பது, உங்கள் அனைவருக்கும் தெரியும். இப்பொழுது பாருங்கள், எனக்காக இந்த விக்கிள்ஸ்வொர்த் ஊழியர் ஜெபித்தார். என் இரத்தத்தோடு கலந்திருந்த குடிப்பழக்கத்தை நீக்கி, தேவன் என் ஆத்துமாவை இரட்சித்து விட்டார்! குடிப்பழக்க அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றேன்" என கூறியவுடன்....

**அங்கு வந்திருந்த போலீஸ் சீனியர் ஆபிஸர் ஒருவர் "இந்த தேவ ஊழியரின் ஊழியத்தை இடையூறு செய்ய என்னால் முடியாது. நீங்கள் வேண்டுமானால் இவரை கைது செய்யுங்கள்" எனக் கூறி, விலகி நின்றார். ஜனங்கள் மகிழ்வுடன் தேவனை துதித்தார்கள்!**

மற்றொரு முறை, சில போலீஸ் அதிகாரிகள் நடு ஜாமத்தில் விக்கிள்ஸ்வொர்த்தின் வீட்டுக் கதவைத் தட்டி "உங்கள் உடைமை

களை எடுத்துக் கொண்டு இப்போதே இந்த வீட்டை காலி பண்ணுங்கள்" என ஆணை பிறப்பித்தார்கள்.

*அதற்கு விக்கிள்ஸ்வொர்த் "உங்கள் ஆணையை மறுக்கிறேன்! ஆகிலும் உங்கள் ஆணையை ஒரு நிபந்தனையோடு ஏற்றுக் கொள்கிறேன். இங்கு வந்திருக்கிற போலீஸ் அதிகாரிகளாகிய நீங்கள் இந்த இடத்தில் முழங்கால்படியிடுங்கள்! நான் உங்களுக்காக ஜெபிப்பேன்! அவ்வாறு ஜெபித்தபிறகு, உங்கள் ஆணையின்படி வீட்டை காலிசெய்ய நான் தயார்!" என கூறியவுடன், தெய்வ பிரசன்னத்தில் நிற்க இயலாத அந்த போலீஸ் அதிகாரிகள், மௌனமாய் திரும்பிச் சென்று விட்டார்கள்!*

இவ்வாறாக தேவஊழியர் விக்கிள்ஸ்வொர்த், சுகமளிக்கும் வரம் பெற்றவராய் மாத்திரமல்ல, விசுவாச தைரிய நெஞ்சுடையவராய் கர்த்தருடைய நாமத்திற்குப் புகழ் சேர்த்தார்!

– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

---

## குயவன் கையிலிருப்பதே நலம்! நன்றாய் வனைந்திடுவார்!

**ச**பைகள் பெருகுவதும், கிறிஸ்தவர்களின் தொகை அதிகரிப்பதும் சந்தோஷமே! ஆனால், நாம் பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு நமது ஜீவியம் மாற்றப்படாவிட்டால், அதினால் என்ன பிரயோஜனம்? தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற திரளான மனுஷருடைய ஜீவியத்தை நாம் கவனிக்கும் போது, எவ்வளவு துக்கம்! பற்பல பாவங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள்! பரிசுத்த ஜீவியத்தின் பாக்கியத்தையும் சந்தோஷத்தையும் அறியார்கள்! பாவங்களில் தொடர்ந்து நிலைத்திருப்பது, கிறிஸ்து மார்க்கமல்ல! நாம் எத்தனை ஆராதனைகளுக்குப் போனாலும் என்ன? எத்தனை ஜெபக் கூட்டங்களை, ஓய்வு நாள் வகுப்புகளை நடத்தினாலும் என்ன? எத்தனை பிரசங்கங்களைக் கேட்டாலும் என்ன? **பாவத்தில் நாம் நிலைத்திருக்கிறவரை** இவைகளினால் நமக்கு பிரயோஜனம் இல்லை! மற்றவர்களுக்கும் நம்மால் ஆசீர்வாதம் இல்லை! ஆண்டவருக்கும் நம்மால் எவ்வித மகிமையும் இல்லை!

பாவஜீவியம் இன்பமாயிருக்கலாம். இலாபமாய் தோன்றலாம்! அதைவிட்டு விலகுவது நமக்குக் கஷ்டமாயிருக்கலாம்! **பாவத்தின் வஞ்சகம் மகா கொடியது.** பாவம் நிச்சயமாகவே நமக்கும் நமது குடும்பத்துக்கும் சாபம். **பாவத்தால் ஒருபோதும் ஒருவருக்கும் நன்மை இல்லை.** கொஞ்சக்காலம் நலமாகத் தோன்றினாலும், சடுதியில்

*கெட்டுப்போவதற்கே ஏதுவாகும். பாவம், ஆண்டவரையும் நம்மையும் பிரிக்கும்! இருதயத்தைக் கடினப்படுத்தும். புத்தியை அந்தகாரப் படுத்தும். ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் கெடுக்கும்! ஆபத்தையும் சாபத்தையும் கொண்டுவரும். பாவம் வஞ்சனையுள்ளது! அது உண்மை யான ஜீவியமல்ல.* **பாவம் என்பது விஷம். அதை விழுங்குவது மோசம்!**

> **பாவம் வஞ்சகமாயிருப்பதுபோலவே, மன்னிப்பு கேட்டுக் கொண்டால் போதும் என்பதும் வஞ்சகமே! பிள்ளை விஷத்தை விழுங்கிவிடும்போது, மன்னித்தால் பிழைத்துக் கொள்வானோ? அவன் அதை வாந்தி பண்ண வேண்டுமே!**

*பாவ ஜீவியத்தை முற்றிலும் விட்டுவிட முடியுமோ? என்று கேட்கிறோம். இந்தக் கேள்வியே தவறானது!*

> *பாவத்தை விட்டுவிடுவதும், பரிசுத்தமாய் நடப்பதும் நம்மால் ஆகிற காரியமல்ல! கர்த்தர் நம்மில் செய்யவேண்டிய வேலையை நாம் செய்யப் பார்ப்பது பிசகு. கிறிஸ்துவின் கையில் உங்களை விட்டுவிடுங்கள். உங்கள் பாவங்களை மன்னிப்பவர் அவர். உங்களைக் கழுவுகிறவர் அவர். உங்கள் இருதயத்தை மாற்றுகிறவர் அவர். உங்களுக்குள் தமது ஆவியை வைத்து உங்களை மறுரூபமாக்குகிறவர் அவர். உங்களைப் பலப்படுத்திப் பாவத்தின்மேல் வெற்றி கொடுப்பவர் அவர்! நற்கனிகளினால் உங்கள் ஜீவியத்தை அலங்கரித்து பிறருக்கு உங்களை ஆசீர்வாதமாக்குகிறவர் அவர்! அவரே உங்களை முற்றிலும் ஆண்டுகொள்ள இடங்கொடுங்கள். அவர் உங்களுக்குள் வசிக்கட்டும். அவர் உங்களுக்குள் போதிக்கட்டும். அவரே உங்களை நடத்தட்டும். அவரே உங்களைக் காக்கட்டும். அவரே உங்களை உபயோகிக்கட்டும். அவரே உங்கள் மகிமையாக விளங்கட்டும்! இது, எவ்வளவு பாக்கியமான ஜீவியம்!*

*'எப்படியாகிலும்' மகிமையில் பிரவேசித்திடுவோம் என்கிறார்கள்.* **மகிமையின் பாதையில்** *நடக்க மனமில்லாவிட்டால், மகிமையின் இராஜ்யத்தில் பிரவேசிப்பது எப்படி? சொஸ்தமாக வேண்டும் என்கிற விருப்பம் மாத்திரம் அவனுக்கு இருந்தது. அசையவோ எழுந்து நடக்கவோ பலமில்லை.* **விரும்பின அவனுக்கு நடக்கக்கூடிய ஆவியின் பலத்தை கர்த்தரே கொடுப்பார்.** *நமது ஜீவியத்திலாவது ஊழியத்திலாவது எதை அவருடைய மகிமைக்காக விரும்புகிறோமோ, கிருபையுள்ள ஆண்டவர்* **அதை** *நமக்குக் கொடாதிருப்பதில்லை!*

*இதை வாசிப்பவர்களை அருமை இரட்சகர் ஆசீர்வதிக்க*

வேண்டுமென்பது என் முழு வாஞ்சை. **பாவிகளின் சிநேகிதர்** ஒரு ஆத்துமாவைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டால், அதைப்போல வேறு எதுவும் ஆனந்தமில்லை! கர்த்தர், எரேமியா தீர்க்கதரிசிக்குக் காண்பித்த குயவன் திருஷ்டாந்தம், அநேக சமயங்களில் என்னை உயிர்ப்பித்திருக்கிறது. தீர்க்கதரிசி, குயவன் வீட்டில்போய் பார்த்தபோது, அவன் வனைந்து கொண்டிருந்த மண்பாத்திரம் அவன் கையில் கெட்டுப்போயிற்று! அவன் அதைத் தூர எறிந்துவிடாமல் திரும்ப எடுத்து மறுபடியும் வேறே நல்ல பாத்திரமாக வனைந்தான். கர்த்தர் தீர்க்கதரிசியைப் பார்த்து : "இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக்குச் செய்யக்கூடாதோ? **களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல** நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்" என்றார் (எரே.18). கெட்டுபோன பாவிகளாகிய நமக்கு இது எவ்வளவு ஆறுதல்! நமது பாவ ஜீவியத்தால் நம்மை எவ்வளவோ கெடுத்திருந்தாலும், இனஜனத்தார் நம்மை ஆகாதவர்கள் என்று தள்ளிவிட்டாலும், நமது பாழான ஜீவியம் நமக்கே அருவருப்பாகி, உயிரோடிருப்பதிலும் செத்துப்போவது நல்லதென்று நாம் நினைத்திருந்தாலும், சாபத்துக் கேதுவான நம்மை ஆசீர்வாத பாத்திரங்களாக்க ஆண்டவரால் கூடும்!

> **அந்தக் குயவன் செய்ததுபோல், நான் உங்களை மறுபடியும் நல்ல பாத்திரங்களாகச் செய்யக்கூடாதா? என்று கர்த்தர் கேட்கிறார். பரம குயவனாகிய கிறிஸ்துவின் கையில் களிமண்ணைப்போல் நம்மை வைத்திடுவோமாக!**

அவர் தமது வேலையை ஆரம்பித்து "பரிசுத்தமாக்கப்பட்டதும், **எஜமானுக்கு உபயோகமானதும்,** எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப் பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாக்குவார்" (2தீமோ.2:21). இப்படிப்பட்ட ஜீவியமே நமக்கும் நமது குடும்பத்துக்கும், இம்மைக்கும் மறுமைக்கும் ஆசீர்வாதம்! அப்போது, சகல நிர்பந்தங்களும் நீங்கும். சகல ஆசீர்வாதங்களும் தங்கும்! இதுவே கிறிஸ்து மார்க்கம். இதுவே மோட்ச வாசல்! இதுவே பாக்கியமான ஜீவியம்! உங்களை இவ்விதமாக ஆசீர்வதிப்பதே ஆண்டவருக்குப் பிரியம். இந்த ஜீவியத்தில் பிரவேசித்தவர்களுக்குத்தான் இதன் பாக்கியமும் ஆசீர்வாதமும் தெரியும். மற்றவர்களுக்கு என்ன தெரியும்? பெயரளவுக்கு கிறிஸ்தவர்களாயுள்ளவர்களின் திரளான தொகை கிறிஸ்து மார்க்கத்துக்கு பெரிய தடை! கர்த்தர் அவர்களுக்கு இரங்குவாராக!

– பரமானந்தம் ஐயர்

## ‘சுயத்தை’ சுமையாகக் கண்டவனே, தன் சிலுவை எடுப்பான்!

“**சு**யம்” என்பதை, உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் சுமக்கும் “**சுமை**” என அறிந்தவன் மாத்திரமே “சிலுவை வழியை” போற்றுவான்! சுவிசேஷத்தில், ஒட்டகம் என இயேசு பொருள்படுத்தியது, சுமை சுமக்கும் ஒட்டகமேயாகும்! வனாந்திர நீண்ட பயணத்தில் பயணிக்கும் ஒட்டகம், “தன் சுமையை இறக்கிட” ஆசையாய் இருக்கும்! “ஒட்டகமே, உன் சுமையிலிருந்து சம்பூர்ண விடுதலை பெற்று, நெருக்க மான வழியாய் சுதந்திரம் அடைவாயாக!” என ஒட்டகத்திற்கு இயேசு கூறுவதைப் போன்ற நற்செய்தியைப் பாருங்கள்! அவ்வளவுதான், அந்த ஒட்டகம் பேரானந்தம் கொண்டு “எஜமானே, சுமை இறக்க சுவிசேஷம் தந்தவரே! என் முதுகில் டன் டன்னாய் ஏறியிருக்கும் சுமையை மடமடவென்று இறக்கிவிட்டேன்! இதோ, நான் இப்போது ‘நெருக்கமான வழியென்ன’ **ஊசிமுனை வழியாகக்கூட** கடந்து “விடுதலை ஜீவியம் பெறுவேன்” எனக்கூறி ஆனந்திக்கும்! (மாற்கு.10:25).

‘உலகத்தின் பாவத்தை’ கொல்கொதா மேட்டில் இயேசு சுமந்த பாரச் சிலுவையையா நீங்கள் சுமந்திட இயேசு கூறினார்? அது, பாருலக இரட்சிப்பிற்கு அவர் சுமந்த சிலுவை! அதை, அல்ல! மாறாக “அவனவன் சிலுவையென” நம் சொந்த சிலுவையை சுமப்பதில்தான் நாம் இரட்சிக்கப்படுகிறோம்!

> **சுய கௌரவம், சுய மரியாதை, என தொடரும் எத்தனையோ சுயத்தை காணும்போது “அந்த சுயத்தை அல்லது நமக்குள் கிடக்கும் கொடிய சுமையை” மனதார வெறுத்து, அதை ஒழித்திட இயேசு தந்த வழிதான் “அவனவன் தன்தன் சிலுவை” என்ற ஒப்பற்ற வழி!**

ஆகவேதான், தீய சூழ்நிலைகளில் வெளிப்படும் அந்த கொடிய சுயத்தின் சுமையை வேகவேகமாக சிலுவையில் இறக்கி..... அச்சிலுவையில் சுயம் மரித்திட ஒப்புக்கொடுக்கிறோம்!

“**உன்னை மற்றவர்கள் முன்பாக அவமானப்படுத்துவேன்!**” என கூறும் சஞ்சலம் கொடிதானதுபோல்தான் தோன்றுகிறது. ஆனால் இயேசு தனக்கு வந்த “அவமானத்தை எண்ணாமல்” சிலுவையை சகித்தார்! அல்லது “**உன்னைக் கள்ளனென்று கூறிவிடுவேன்**” என்ற ஆங்காரம் ஒலிக்கும்போது, நம் சுயம் துடிதுடித்துப் போகிறதே! ஆனால், இயேசுவோ “கள்ளர் மத்தியில் ஒரு கள்வராக எண்ணப்பட்ட” விபரீதத்தை சிலுவையில் சகித்தாரே! இப்படியெல்லாம் நாம் சுமையாய் சுமந்த சுய- கௌரவம், சுய - மரியாதை சின்னாபின்னமாய் சிலுவையில் அறையப்பட்டு, ‘சுமை’ குறைவதுதான் ஒப்பற்ற

சுவிஷேம்! இந்த சிலுவையின் சுவிசேஷத்திற்கே, இயேசு மரண பரியந்தம் அதாவது சிலுவை மரணபரியந்தம் கீழ்படிந்தார்! பிதாவோ அவரை "**ஜெயமே ஜெயமென உயிர்த்தெழச் செய்தார்!**". அவரை உயிர்த் தெழச்செய்து தூக்கிய பிதா, நம்மையும் உயர்த்தி, இயேசு போலவே நம்மையும் பிதாவோடு அமரச் செய்யும் பாக்கியம், யாருக்கு கிட்டும்? ஆம், இந்த சுவிசேஷத்தை விசுவாசிக்கிற யாவருக்கும் கிட்டும்! என ஏசாயா 53:1 கெம்பீரிக்கிறது! அல்லேலூயா!

– T. ரத்தினகுமார்

---

## 'யார் மூலம் இரட்சிப்பு வந்தாலென்ன?' அதுவே, கல்வாரி அன்பு!

என் ஆசிரமத்து மக்களிடையே ஒரு வாக்குவாதத்தை கேட்டேன். குழியில் விழுந்துவிட்ட ஒரு ஆட்டுக்குட்டியை, சிலராய் சேர்ந்து தூக்கியெடுத்தார்கள். அந்த நிகழ்ச்சியை வியந்து பார்க்க ஆசிரமத்து மற்ற மக்கள் கூடிவிட்டனர். இங்குதான் அந்த வாக்கு வாதம் துவங்கியது. அங்கு நின்று கொண்டிருந்த ஆசிரமத்துப் பெண் ஒருத்தி "ஆட்டுக்குட்டியின் கதறும் குரலை நான்தான் கேட்டு ஓடி வந்தேன்" என கூறினாள். மற்றொரு சகோதரியோ "இந்த ஆட்டுக்குட்டி, நான் வந்த பிறகுதான் தூக்கியெடுக்கப்பட்டது!" என வாதாடினாள். எப்படியாகிலும் "குழியில் விழுந்த ஒரு ஆட்டுக்குட்டி, மரித்து விடாமல் தூக்கியெடுத்து காக்கப்பட்டது" என்ற அற்புதத்தை இவர்கள் இருவருமே மறந்து வாதிட்டது, மிகுந்த வேடிக்கையாயிருந்தது!

இன்னும் அதிக வேடிக்கை என்னவென்றால், இதே பிழையை நானும் செய்ததுதான்! ஆசிரமத்திலுள்ள ஒரு பெண்ணின் பாவ வாழ்க்கை மாற வேண்டுமென்று நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். அச்சமயத்தில் ஆசிரமத்திலுள்ள மற்றொரு சகோதரி என்னிடம் வந்து, நான் ஜெபித்துக்கொண்டிருக்கும் 'அதே ஆத்துமாவின் விடுதலைக் காக' தானும் ஜெபிப்பதாக கூறியவுடன், என் உள்ளத்தில் ஏற்பட்ட ஒரு குமுறல் "**என் ஜெபத்தின் மூலமாய் தான்**" அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும்! என்பதாய் இருப்பதைக் கண்டு நான் மனந்திரும்பினேன்.

**மேலும், அவளுக்கு கிடைக்க வேண்டிய விடுதலை என் மூலமாய் கிடைக்காமல் போனாலும் "வேறு யார் மூலமாவது கிடைக்கட்டுமே" என்ற பரந்த உள்ளம் என்னிடத்தில் இல்லை என்பதை கண்டு, துக்கமடைந்தேன்!**

இவ்வாறு, இழிவான என் சுயத்தின் நிலையை கண்டு "ஓ கர்த்தாவே, உமது கல்வாரி அன்பின் இரகசியத்தை, இன்னும் அதிகமாய் எனக்கு கற்றுத்தாரும்!" என மனமுடைந்து கண்ணீரோடு ஜெபித்தேன்!

– ஏமி கார்மைக்கேல்

# ஜான் விக்ளிஃப்,

## முதல் ஆங்கிலவேதம் மொழிபெயர்த்து பலியானார்!



**( AD 1328-1384 )**

இங்கிலாந்து தேசத்திலுள்ள 'ஹிப்ஸ் வெல்' என்ற கிராமத்தில் ஜான் விக்ளிஃப் பிறந்தார். 'ஆக்ஸ்போர்டு' அவர் வந்த வருடமுதல், தன்னுடைய அதிகமான காலங்களை அங்கே செலவழித்தார். அப்போது அவர் எழுதிய **'தேவனுடைய பட்சமாய் நின்று'** என்ற புத்தகத்தில், 'கிருபை உபதேசமே' என் உள்ளத்தை வெகுவாய் கவர்ந்தது என எழுதியுள்ளார். ஆக்ஸ்போர்டு புராட்டஸ்டண்டு இயக்க செயல்பாடுகளை வெறுத்த, அன்றிருந்த கத்தோலிக்க குழுவினர் ஆக்ஸ்போர்டு நுழைந்து அநேகரை கொன்றனர். பட்ட பகலில் நடந்த இந்த கொலை தாக்குதலில் விக்ளிஃப்பின் 63 மாணவர்கள் கொல்லப்பட்டார்கள். 1356-ம் ஆண்டு 'சபையின் கடைசி காலம்' என்ற புத்தகத்தை எழுதினார். அவருடைய தீவிரமான கணக்கின்படி, உலகத்தின் முடிவு 14-ம் நூற்றாண்டிலேயே சம்பவிக்கும் என எழுதினார். இந்த நாட்களில் 'சைமன் லங்கம்' என்பவர் இறைகல்லூரி படிப்பு முடித்து ஆக்ஸ்போர்டு பொறுப்பில் வந்து அமர்ந்தார். உடனடியாக ஒரு 'கத்தோலிக்க துறவியை' தலைவராக நியமனம் செய்தார். அவருடைய தலைமையை மாற்றும்படி ரோம் நகரத்து தலைமை அலுவலகத்திற்கு விக்ளிஃப் விண்ணப்பித்தார். ஆனால் ரோம தலைமையோ ஜான் விக்ளிஃப் மீது மறைவாக வஞ்சம் தீர்க்க முயற்சித்தது. விக்ளிஃப் தொடர்ச்சியான தன்னுடைய ஆராய்ச்சியில் "வேதம் ஒன்று மாத்திரமே சத்தியம், நித்திய வழியில் நடத்தும் பிரமாணங்கள்!" என வேத வாக்கியங்களைப் போற்றி.... அதே வேளையில் **கத்தோலிக்க பாதிரிகளும் போப் தலைமையும் கொண்டு வந்த உபதேசங்களுக்கு வேதாகமத்தில் யாதொரு ஆதாரமுமில்லை** என்பதை ஓங்கி வலியுறுத்தினார். குறிப்பாக, மரித்த ஆத்துமாக்கள் தங்கும் உத்தரிப்பு ஸ்தலம் வேதத்தில் காணப்படவில்லை என்பதை வலியுறுத்தினார். இன்னும் அதிகமாய், மரித்த பரிசுத்தவான்களிடத்தில் ஜெபம் ஏறெடுப்பதையும், வேத பூர்வமாய் மறுத்தார். கத்தோலிக்க முறைமையின்படியான ஜெபத்திற்கு பதிலாக "கர்த்தருடைய ஜெபத்தை" முக்கியப்படுத்தி புத்தகங்களில் எழுதி, போதித்தார்.

அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வேதாகமத்தை, போப் தலைமையகம் அங்கீகரிக்க மறுத்தது! அதே வேளையில், அவை அனைத்தும் வேதப்புரட்டு (Heresy) எனவும் குற்றம் சுமத்தியது. **புராட்டஸ்டண்டு வேதாகமத்திற்கு முன்னோடியாக ஜான் விக்ளிஃப் மொழிபெயர்த்த ஆங்கில வேதாகமம் கருதப்பட்டது!** கொதித்தெழுந்த ரோமாபுரி, விக்ளிஃபின் மூல மொழிபெயர்ப்புகளை எரித்தது மாத்திரமல்லாமல், அவரது சரீரத்தை எரித்து, அவர் சாம்பலை மூட்டை கட்டி அவர் பிறந்த சொந்த ஊர் நதியில் வீசி எறிந்தார்கள்! ஆகிலும் விக்ளிஃப் ஆங்கில வேதாகமம் மீட்டெடுக்கப்பட்டு கத்தோலிக்கத்திற்கு பிறகு வந்த முதல் புராட்டஸ்டண்டு ஆங்கில வேதாகமமாய் இன்றும் ஜொலிக்கிறது!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## வாலிபனே "கிறிஸ்துவின் ஒளி சிந்தும் வாழ்க்கை" உனது சவாலாகட்டும்!

பக்த சிரோன்மணி சாது சுந்தர்சிங் அவர்களைப் பார்த்த அனைவரும், அவருடைய பரிசுத்த முகம் பிரகாசிப்பதைக் கண்டனர். அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு ஆண்டவரண்டை வந்தவர்களைவிட அவரது பரிசுத்த முகச்சாயலைப் பார்த்து கர்த்தரிடம் வந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். அவருடைய ஒளி நிறைந்த முகத்தைப் பார்த்த வாலிபர், வயோதிபர்கள் மட்டுமின்றி சின்னஞ்சிறார்கள் கூட, ஆண்டவர் இயேசுவை சுலபமாகக் காண முடிந்தது. ஒரு தடவை இங்கிலாந்து தேசத்தில் சுந்தர் சிங் ஒரு கிறிஸ்தவ வீட்டின் கதவைத் தட்டி நின்றபோது, ஒரு சிறுமி வீட்டின் உள்ளிருந்து ஓடி வந்து சுந்தருடைய ஒளி நிறைந்த முகத்தை கொஞ்ச நேரம் உற்றுப்பார்த்து விட்டு, வீட்டிற்குள்ளிருந்த தனது தாயிடம் ஓடிச்சென்று "அம்மா, இயேசு நமது வீட்டின் கதவைத் தட்டிக் கொண்டு நிற்கின்றார்" (Mummy, Jesus is Knocking at the door) என்றாளாம்!

தேவனை அறியாத ஒரு கடையாந்திர தீவிற்கு தன்னை ஒரு மிஷனெரியாக அனுப்பும்படியாக ஒரு பரிசுத்த சகோதரி தனது கிறிஸ்தவ மிஷன் ஸ்தாபனத்திடம் கேட்டுக்கொண்டார்கள்! ஒரு ஆண்டு காலத்திற்குள்ளாக தேவபெலத்தால் முழுத் தீவையும் கர்த்தருடைய ஒளிக்குள் கொண்டு வந்துவிட முடியும் என்ற உறுதியை கர்த்தர் எனக்குத் தந்துள்ளார்! அதற்காக எந்த ஒரு பிரசங்கமும், போதனையும் நான் அந்த மக்களிடம் செய்யாமல், கர்த்தர் தந்த ஒளி சிந்தும் பரிசுத்த வாழக்கையின் மூலமாக மாத்திரமே அந்த காரியத்தை செய்யப் போவதாகச் கூறிச்சென்ற அவர்கள், அப்படியே தனது பிரகாசமான கிறிஸ்தவ வாழ்வின் மூலமாக முழு தீவையும் ஆண்டவரண்டை கொண்டு வந்தார்கள். தனது இரட்சகரைப் பற்றி அந்த அம்மையாரின் உதடுகள் அல்ல, அவர்களது பரிசுத்தமான வாழ்க்கையே சாட்சி பகர்ந்தது.

ஓ, வாலிபனே "கிறிஸ்துவின் ஜீவியம்" ஒளி பிரகாசிக்கும் ஜீவியம்! உன் இருளான வாழ்வைப் பார்! அதைவிட்டு நீ வெளியே வந்துவிடு! அப்போது இரட்சகர், உன்னையும் பிரகாசிக்கச் செய்திடுவார்!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.